சுருக்கம்

நிர்வாகம் – செய்தி மக்கள் தொடர்புத் துறை – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி கொரோனா வைரஸ் நோய்த் தொற்று (Covid–19) தடுப்பு நடவடிக்கையாக சென்னை மற்றும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த பத்திரிக்கைகள், தொலைக்காட்சிகள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்களுக்கு தலா ரூ.5,000/– வீதம் 1,000 நபர்களுக்கு ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) சிறப்பு ஊக்கத் தொகை வழங்க ரூ.50,00,000/–ம் கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த் துறை

அரசாணை (நிலை) எண்: 114

நாள்: 20.10.2021
திருவள்ளுவராண்டு 2052
பிலவ வருடம் ஐப்பசி 3–ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 26.05.2021–ஆம் நாளிட்ட பத்திரிகை செய்தி.
2. அரசாணை (ப) எண்.50, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்.4)த் துறை, நாள் 03.06.2021.

***

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்திக் குறிப்பில், தமிழகத்தின் கொரோனா நோய்த் தொற்றின் தடுப்பு நடவடிக்கைகளையும் விழிப்புணர்வுப் பணிகளையும் சிறப்பாக மக்களுக்கு கொண்டு செல்லும் நாளிதழ்கள் / தொலைக்காட்சி செய்தியாளர் நலன் காக்கும் வகையில் ஊடகத் துறையினருக்கு நிவாரண உதவித் தொகையாக தலா ரூ.5,000/– வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 30.04.2021 அன்று வரை பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் (அரசு அங்கீகார அட்டை / மாவட்ட ஆட்சியர் வாயிலாக வழங்கப்பட்ட அடையாள அட்டை / இலவசப் பேருந்துப் பயண அட்டை போன்ற ஏதேனும் ஒரு வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்டவர்கள்) என மொத்தம் 5048 நபர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை நடைமுறைப்படுத்திட தலா ரூ.5,000/– வீதம் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.2,52,40,000/– அவர்களின் வங்கிக் கணக்கு வாயிலாக செலுத்த நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, **சென்னை தலைமையிடம் மற்றும் பிற மாவட்டங்களில் ஊரடங்கின் காரணமாக வெளி மாவட்டங்களுக்குச் சென்று சொந்த மாவட்டங்களுக்கு திரும்பிடாத செய்தியாளர்கள் மற்றும் விடுபட்ட செய்தியாளர்கள் என தோராயமாக** (ஏற்கனவே நிவாரண உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்ட 5048 நபர்கள் தவிர) 1,000 நபர்களுக்கு ரூ.5,000/–

வீதம் சிறப்பு ஊக்கத் தொகையாக அவர்களின் வங்கிக் கணக்கு வாயிலாக செலுத்த ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 சமூக நலன் -
200 ஏனைய திட்டங்கள் - மாநிலச் செலவினங்கள் -
AZ பத்திரிக்கையாளர்களுக்கு சிறப்பு நிதியுதவி - 309
உதவித் தொகை - 09 ஏனையவை"
IFHRMS (த.தொ.கு. 2235-02-200-AZ- 30909)

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.50,00,000/-ம் 2021-2022 ஆம் நிதி ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2021-2022-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2021-2022-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (த.வ. (ம) செ./வ.செ.பொ-I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. ஒப்பளிக்கப்பட்ட தொகையில், செய்தியாளர்களுக்கு விடுவிக்கப்பட்டது போக, மீதமிருப்பின் அவற்றை உரிய அரசுக் கணக்கில் செலுத்திடவும் ஆணையிடப்படுகிறது.

7. இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சார்பற்ற எண் 42526/ நிதி (த.வ(ம)செ.)த் துறை/2021, நாள் 13.10.2021-இன் படியும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் (ASL) 581 (ஐநூற்று எண்பத்தொன்று) உடன் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர், சென்னை-9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை -9.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை -9/18.
நகல்:
நிதி (வ.செ.பொ.1/வ.செ.பொது II/ பொ.ப.I/வ.வ.I/(த.வ.(ம)செ.))த் துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
செய்தி மக்கள் தொடர்புத் துறை (கணக்கு/வரவு-செலவு)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/11/21

பிரிவு அலுவலர்

20/10/21